**அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையில் 1.5 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம், இலங்கை கணக்கீட்டு நியமங்களின் மூலம் தேவைப்படுகின்ற அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரதியீடு செய்யக் கூடாது எனினும் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய முகவர் கமிஷன் கணக்கில் காணப்பட்ட ரூபா 13.39 மில்லியன் தொகைக்கான வரவு மீதி அத்திகதியில் உள்ளவாறு ரூபா 42.29 மில்லியன் தொகைக்கான செலவு மீதிக்கு எதிராக பிரதியீடு செய்து காட்டப்பட்டிருந்தது. | முகவர் கமிஷன் கணக்கில் காணப்படும் இணக்கஞ் செய்யப்படாத வரவு மீதியாகிய ரூபா 13.46 மில்லியன் தொகை 2011 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் பழைய மீதி ஒன்றாக இருந்தமையால் நிறுவனம் ஒன்று அல்லது நபர் ஒருவரிடம் கிடைக்க வேண்டியது என அறுதியாக காட்ட முடியாமல் இருக்கின்றது எனவும், தற்போது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்காக கணக்காய்வு குழுவின் அங்கீகாரத்துடன் பணிப்பாளர் சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதனால் முன்னர் இருந்தவாறே முகவர் கமிஷனின் கீழ் காட்டப்பட்டுள்ளது என மற்றும் கணக்காய்வு குழு மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் 01/2020 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் 36(அ) பந்தியின் பிரகாரம், பயன்படுத்தப்பட்ட கிரய சூத்திரம் உட்பட இருப்புக்களை கணிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், ஒசுசல களில் மீதியான இருப்புக்கள் தொடர்பாக அவ்வாறு வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனம் கிரய சூத்திரத்தை பயன்படுத்தாததுடன், சந்தை விலை மட்டம் மற்றும் ஏனைய மருந்துப் பொருட்கள் சந்தையின் நிலைமையை கவனத்தில் எடுத்து மருந்துப் பொருட்களின் விலைகள் தீர்மானிக்கப்படுகின்றது என, ஒசுசலகளில் மீதி இருப்பு தேறாத இலாப சீராக்கள் மேற்கொண்ட பின்னர் காட்டப்பட்டுள்ளது என, இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் 36(அ) பந்தியின் பிரகாரம் இருப்புக்களை கணிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு | இருப்புக்களை கணிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் 4.7.3 பந்தியின் கீழ் காட்டப்பட்டிருக்காமையால் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொள்கை நிதிக் கூற்றுக்களில் 4.7.3 பந்தியில் காட்டப்பட்டுள்ளது என. | |
| (இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக மீதிப் பெறுமதி மற்றும் பயன்தரு வாழ்க்கைக் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 29.84 மில்லியன் கிரயத்திற்கான நிலையான சொத்துக்கள் முற்றாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. அதன் படியான மதிப்பீடு செய்யப்பட்ட வழு இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் சீர்திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020 ஆண்டில் நிலவிய தொற்றுநோய் நிலைமை காரணமாக சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்வதில் கஷ்டங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் 2021 ஆண்டில் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கான ஆரம்ப அலுவல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒசுசலகளில் மீதி இருப்பின் கிரயம் மற்றும் அந்த இருப்புக்களின் பரிமாற்றப் பெறுமதி இடையே உள்ள வித்தியாசத்தை இனங்கண்டு அதனை உழைக்கப்படாத இலாபம் என சீராக்கல் செய்ய வேண்டியிருந்த போதிலும், மீதி இருப்புக்களின் கிரயத்தை அறுதியாக இனங்காணாமல் இருப்புக்களை பரிமாற்றப் பெறுமதியில் 7.42 சதவீதத்திற்கு சமமான ரூபா 48.93 மில்லியன் தொகை உழைக்கப்படாத இலாபம் என ஒதுக்கப்பட்டிருந்தது. | பிரதான களஞ்சியத்தில் இருந்து ஒசுசலகளுக்கு மாற்றப்பட்டிருந்த இறக்குமதி செய்த மருந்து வகைகளில், வருட இறுதியில் உள்ளவாறு மீதியாக இருந்த இருப்பின் பரிமாற்றப் பெறுமதியை சரியாக கணிப்பதற்காக உரிய கணினி முறைமை ஒன்று கூட்டுத்தாபனத்திடம் காணப்படவில்லை என, கூட்டுத்தாபனத்தினால் ஒசுசலகளின் பொதுவான இருப்பில் பரிமாற்ற சதவீதத்தை அகற்றி பெற்றிருந்த மதிப்பீட்டு செய்முறைக்கு வருட இறுதியில் மீதியாக காணப்படும் இருப்பின் பரிமாற்றப் பெறுமதி கணிக்கப்படுகின்றது என, மற்றும் அதனை கணக்காய்வினாலும் ஏற்றுக் கொண்டு பல வருட காலம் முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது எனவும் மற்றும் புதிய கணினி முறைமை செயற்படும் போது மிகவும் | ஒசுசலகளில் மீதி இருப்புக்களின் கிரயம் மற்றும் அந்த இருப்புக்களின் பரிமாற்றப் பெறுமதி இடையே வித்தியாசத்தை அறுதியாக இனங்கண்டு அதனை உழைக்கப்படாத இலாபம் என சீராக்கல் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சரியான செய்முறை ஒன்று எதிர்காலத்தில் கடைபிடிக்க முடியும் என. | |
| (ஆ) | 2018 ஆண்டிற்கு உரிய ரூபா 30.28 மில்லியனிற்கான 03 வரவுப் பத்திரங்கள் இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்த தவறு அதே போல் 2019 ஆம் ஆண்டிற்கான ரூபா 10.84 மில்லியன் தொகைக்கான 07 வரவுப் பத்திரங்கள் பின்னர் இரத்துச் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காக கடந்த காலத்திற்கு பொருத்தமாக சரி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான கணக்குகளுக்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் கொள்வனவு மற்றும் விற்பனவுக் கணக்குகள் ரூபா 39.54 மில்லியன் தொகை வீதம் மற்றும் சேவைக் கட்டண வருமானக் கணக்கு ரூபா 1.58 மில்லியன் தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சுகாதார சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட வரவுப் பத்திரத்தில் காணப்பட்ட தவறினை சரி செய்யும் போது வரவுப் பத்திரத்தின் பெறுமானத்தில் பொருண்மையானது என கணித்து அதனை நடைபெறு ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கல் செய்தல் அல்லது சீராக்கல் செய்யப்படக் கூடாது என தீர்மானிக்கப்படுகின்றது என, மேற்குறிப்பிடப்பட்டுள்ளது மூன்று வரவுப் பத்திரங்களின் பெறுமதி ஒன்று எனவும், இந்த ஆண்டில் ஒரே தடவையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் மற்றும் எவ்வாறாயினும் இந்த வரவுப் பத்திரங்களின் பெறுமதி மொத்த விற்பனவுப் பெறுமதியில் 1 சதவீதத்தை விட குறைவானது எனவும். | இந்தத் தவறினை சரி செய்து 2021 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். |
| (இ) | கடந்த பல வருடங்களின் போது 15 வழங்குனர்களினால் கொள்வனவு செய்யப்பட்டு மருத்துவ வழங்கள் பிரிவிற்கு வழங்கியிருந்த மருத்துவ வழங்கல்களுக்காக பண்டப் பெறுவனவு பத்திரத்துடன் இன்வொயிஸ்கள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்காமையால் கணக்காய்வுத் திகதியாகிய 2021 மார்ச் 24 திகதி வரை கணக்கீடு செய்யப்பட்டிருக்காத கொள்வனவுகள் மற்றும் விற்பனைகளின் பெறுமதி ரூபா 58.68 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதற்கான சேவைக் கட்டண வருமானமும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ வழங்கல் பிரிவினால் குறிப்பிட்ட ஆவணங்கள் வழங்குவதில் தாமதம் காணப்படுகின்றது எனவும், இந்த நிலைமையை சரி செய்வதற்காக கூட்டுத்தானத்தினால் புதிய செய்முறை ஒன்று திட்டமிடப்பட்டு 2021 நவம்பர் மாதம் முதல் செயற்படுத்தப்பட்டுள்ளது என. | கொள்வனவு மற்றும் விற்பனவுப் பெறுமதி மற்றும் சேவைக் கட்டணம் சரியாக சந்தர்ப்பங்களில் இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2016 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவிற்காக வழங்குனர்களுக்கு வழங்கியிருந்த பிரதான கட்டளைகள் தாமதம் | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என மற்றும் அறவீடு செய்வதை விரைவுபடுத்தும் படி உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது என. | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்தல் செயற்திறனுடன் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கணக்கீடு செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அடைந்திருந்தமையால் 98 வகையான மருத்துவ வழங்கல் விடயங்கள் உள்நாட்டு சந்தையில் இருந்து கொள்வனவு செய்வதற்கு நேரிட்டிருந்ததுடன் செலவிடுவதற்கு நேரிட்டிருந்த மேலதிக கிரயம் ரூபா 565.40 மில்லியன் தொகையாக இருந்தது. 2021 ஒக்தோபர் 07 ஆம் திகதியளவில் அவற்றில் ரூபா 103.09 மில்லியன் தொகை மாத்திரம் வழங்குனர்களிடம் அறவீடு செய்து காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீதியான ரூபா 462.30 மில்லியன் தொகையினை அறவீடு செய்ய வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு அல்லது கணக்கீடு செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி, 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதியில் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சந்தைகளில் இருந்து கொள்வனவு செய்திருந்த மருத்துவ வழங்கல்கள் தரம் குறைவானதாக இருத்தல், குறைவாக வழங்கள், நிராகரிக்கப்பட்ட இருப்புக்கள் காணப்படல் மற்றும் சேதமடைந்த இருப்புக்கள் காணப்படல் ஆகிய காரணங்களினால் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வழங்குனர்களிடம் இருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 92.03 மில்லியன் தொகையினை அறவீடு செய்வதற்கு அல்லது கணக்கீடு செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அடிப்படைக் கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் கைதேர்ந்த தன்மைகளின் கீழ் காட்டப்பட்டுள்ள நட்டத்தை கணக்கீடு செய்ய முடியாது என. | வழங்குனர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டிய பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| விடயம் | | நிதிக் கூற்றுக் களின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கை களின் படி பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| (அ) | 1996 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஒசுசலகளின் மூலம் விற்பனை செய்வதற்காக கொள்வனவு செய்திருந்த மருத்துவ வழங்கல்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தரக் குறைவாக இருந்த மருத்துவ வழங்கல்களின் கிரயம் | 111.84 | 91.61 | 20.23 | தரக் குறைவான மருந்துகளின் கிரயம் மற்றும் இருப்பு மெய்மையாய்தல் அறிக்கையின் பெறுமதி இடையே ரூபா 20.23 மில்லியன் வித்தியாசம் ஏற்படுவதற்கான காரணத்தை கண்டறிவதற்காக கூட்டுத்தாபனத்தினால் விசாரணை ஒன்று நடாத்தப்படுகின்றது என மற்றும் விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் வித்தியாசத்தை பதிவழிப்பதற்காக விசாரணை தீர்ப்பின் படி தொடர்நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்காண்பதற்கு, தேவையான சீராக்கல்கள் மேற் கொள்வதற்கு மற்றும் உரியவாறு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுதவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து பெற வேண்டிய மீதி | 34,424 | 34,020 | 404 | இந்த வித்தியாசத்தை இணக்கஞ் செய்வதற்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் உறுதிப்படுத்தப்பட்ட மீதியின் விரிவான ஆவணங்கள் அந்த நிறுவனத்தில் இருந்து கோரப்பட்டுள்ளது எனவும் அதன் படி வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | மருத்துவ வழங்கல் பிரிவுடன் மீதியை இணக்கஞ் செய்து உரிய வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | விடயம் | நிதிக் கூற்றுக் களின் படி பெறுமதி | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | | | |
| (அ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 447 வியாபாரக் கடன்பட்டோர்கள் தொடர்பான மீதிகள் | 138.81 | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் | அனைத்து கடன்பட்டோர் களுக்கு உரிய முறையில் மீதிகளை உறுதிப்படுத்தும் படியும் மற்றும் கணக்காய்விற்கு பிரதி ஒன்றுடன் அனுப்பும் படி தபால் மூலம் அறிவிக்கப்பட்டது என. | மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் மூலம் கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 101 கடன்கொடுத்தோர்கள் தொடர்பான மீதிகள் | 267.97 | | இந்த மீதிகளில் அனேகமானவை மருந்துகள் வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டியுள்ள மீதிகளாக காணப்படுகின்றன என மற்றும் இது தொடர்பாக வைத்தியசாலைகளில் இருந்து பணம் கிடைத்த பின்னர் வழங்குனர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் என. | மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் மூலம் மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007, 2008, 2009 மற்றும் 2012 ஆண்டுகளுக்குரிய ரூபா 2 மில்லியன் கிரயத்திற்கான பிணக்கிலுள்ள வழியில் இருப்பு (Disputed Goods in Transit) மற்றும் 2007 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரையான 5 வருடங்களுக்குரிய மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 12.60 மில்லியனிற்கான சுங்கக் கட்டணமாக 2013 ஆம் ஆண்டு | பழைய கடன் மீதிகள் திறைசேரியின் அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | அறவிடப்பட வேண்டிய தொகையினை உரிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதல் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மருத்துவ வழங்கல் பிரிவினால் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து பெற வேண்டிய ரூபா 34,424.92 மில்லியன் தொகையில் ரூபா 211.59 மில்லியன் தொகை 11 வருடங்கள் மற்றும் 22 வருட கால முதல் தீர்ப்பதற்கு முடியாமல் காணப்பட்டது. | அரச மருத்துவ வழங்கல் பிரிவிற்கு பண்டங்கள் ஒப்படைக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றை ஒப்புக் கொண்டு பதிவு செய்யும் செய்முறை ஒன்று அக்காலத்தில் காணப்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது என, இந்த அனைத்து மீதிகளும் 2007 ஆம் ஆண்டிற்கு முன்னர் உரியவையாக இருந்ததுடன் அதன் பின்னர் அனைத்து மீதிகளும் தீர்க்கப்பட்டிருந்தது என, மற்றும் பழைய கடன் மீதிகள் திறைசேரியின் அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | பழைய கடன் மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது முறையான அங்கீகாரம் ஒன்றுடன் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொள்கலன் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 16.48 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் ஐந்தொகை திகதியின் பின்னர் அவற்றில் ரூபா 4.04 மில்லியன் தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. 2 முதல் 14 வருடங்கள் வரையான காலம் தொடக்கம் தீர்த்துக் கொள்வதற்கு முடியாமல் காணப்பட்ட மீதி ரூபா 6.77 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் ஐந்தொகை திகதியின் பின்னர் அவற்றில் ரூபா 178,984 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் 2007 ஆம் ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 5.45 மில்லியன் தொகையில் பணம் ஏதும் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொள்கலன் வைப்பு மீதி ரூபா 16.48 மில்லியன் தொகையாக இருந்த போதிலும், தற்போது அவற்றில் ரூபா 4.04 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருந்தது என, 02 வருடங்களுக்கும் 14 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 6.77 மில்லியன் தொகையில் ரூபா 178,984 தொகை அறவிடப்பட்டுள்ளது என, அதேபோல் அந்த காலப்பகுதி தொடர்பாக ரூபா 5.76 மில்லியனிற்கான பெறுமதி ஒன்று அரசாங்க கணக்குக் குழுவின் பரிந்துரையின் படி கணக்குகள் இருந்து பதிவழிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது என. கடந்த காலப் பகுதியில் நாட்டில் காணப்பட்ட நிலைமை காரணமாக இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் உட்பட கப்பல் கம்பனிகள் விடுவித்தல் அலுவல்களுக்காக மாத்திரம் | கொள்கலன் வைப்புக்களை அறவீடு செய்தல் வினைத்திறனுடன் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முக்கியத்துவம் வழங்கியிருந்தமையால் கொள்களன் வைப்பு மீதியினை அறவீடு செய்வதில் தாமதம் ஏற்பட்டிருந்த போதிலும் எதிர்காலத்தில் அதனை விரைவுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் கொள்கையின் படி விற்பனை செய்த நாள் முதல் 30 நாட்களுக்கும் 45 நாட்களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வியாபாரக் கடன்பட்டோரிடம் பணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு ரூபா 1,426.07 மில்லியன் தொகைக்கான கடன்பட்டோர் மீதியுள் காணப்பட்ட தனியார் மற்றும் அரச மற்றும் அரை அரச நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 13.05 மில்லியன் தொகை 05 வருடங்களை மிகையான காலம் முதல் மற்றும் ரூபா 39.57 மில்லியன் தொகை 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் நிலுவையாக காணப்பட்டதுடன், அந்த மீதிகளில் ஐந்தொகை திகதிக்குப் பின்னர் ரூபா 6.23 மில்லியன் தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தன. அவற்றில் 05 வருடங்களை விட பழமையான ரூபா 10.44 மில்லியன் கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்காக மாத்திரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 05 வருடங்களை மிகைத்துள்ள தனியார், அரச மற்றும் அரை அரச நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய ரூபா 13.05 மில்லியன் தொகை அரச வைத்தியசாலைகளில் இருந்து மற்றும் ஏனைய நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 2.29 மில்லியன் தொகை என, தற்போது அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுத்துள்ள பெறுமதி ரூபா 10.44 மில்லியன் தொகை என, 01 வருடம் மற்றும் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதல் தனியார் மற்றும் அரை அரசு நிறுவனங்களில் இருந்து மேலும் மீதியாக காணப்பட்ட பெறுமதியாகிய ரூபா 33.34 மில்லியன் தொகையில், வைத்தியசாலைகளில் இருந்து மற்றும் அரச நிறுவனங்களில் இருந்து, பாராளுமன்ற வளாகத்தில் இருந்து மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய பெறுமதிகள் என, அவற்றில் அடங்கிய பாராளுமன்ற வளாகத்திற்கு வழங்கியிருந்த மருந்துகளுக்காக மொத்த மீதியாகிய ரூபா 14.62 மில்லியன் தொகையினை அறவீடு செய்வதற்காக சபாநாயகர், சுகாதார செயலாளர் மற்றும் உரிய தரப்பினருடன் பல தடவைகள் கலந்துரையாடிய போதிலும் இந்த நிலுவைத் தொகையை தீர்த்துக் கொள்ளல் தொடர்பாக திருப்திகரமான பதில் ஒன்று எங்களுக்கு | கூட்டுத்தாபனத்தின் கொள்கையின் படி கடன் அறவீடு செய்யும் அலுவல்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் அறவீடு செய்வதை செயற்திறனுடன் மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கிடைக்கவில்லை என. கோப் குழுவில் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது எனவும், மற்றும் இந்த அறவீடு செய்தல் தொடர்பாக சிக்கல் ஒன்று காணப்பட்டமையால் 2017 ஆண்டின் போது இந்த மொத்தப் பெறுமதிக்கு சமமான பெறுமதி ஒன்று அறவிட முடியா மற்றும் ஐயக்கடன் என ஒதுக்கப்பட்டது எனவும். | |
| (உ) 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 378.32 மில்லியன் தொகைக்கான வழங்குனர்களிடம் பெறவேண்டியிருந்த முற்பணம் (Advance receivable from Suppliers) அவற்றில் ரூபா 1.13 மில்லியன் தொகை 5 வருடங்களுக்கும் 12 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதலும், அத்திகதியில் உள்ளவாறு ரூபா 32.35 மில்லியன் தொகைக்கான வழங்குனரிடம் பெறவேண்டிய கோரிக்கைகள் (claims receivable from suppliers) அவற்றில் ரூபா 988,247 தொகை 02 வருட காலத்துக்கு மிகையான காலம் முதலும் அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்தல் தொடர்பாக உரிய ஏற்பாடுகளை கடைபிடித்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும், மற்றும் தற்போதைய நிலைமை தொடர்பாக பதிவேடு ஒன்று கணக்காய்வுப் பகுதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | கூட்டுத்தாபனத்தின் கொள்கை மற்றும் உடன்படிக்கையின் படி வழங்குனர்களிடம் பெறவேண்டிய முற்பணங்கள் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் அறவீடு செய்தல் செயற்திறனுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அட்டுறுச் செலவுகள் மற்றும் ஒதுக்கங்கள் கணக்கின் மீதியாகிய ரூபா 265.34 மில்லியன் தொகையில் 15 சதவீதம் எனப்படும் ரூபா 40.81 மில்லியன் தொகை ஒரு வருடத்தை விட மிகையான காலம் முதல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன் எனவும், பல்வேறு காரணங்களினால் குறிப்பிட்ட கொடுப்பனவுகள் தாமதம் அடைந்திருந்த போதிலும் செலுத்த வேண்டிய செலவுகள் இவ்வாறு அட்டுறுச் செலவுகள் என காட்டப்பட்டுள்ளது எனவும், மற்றும் இவ்வாறான அனைத்து கொடுப்பனவுகள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | அட்டுறுச் செலவுகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வங்கி பில் பத்திரக் கணக்கு மீதி | நிதிப் பிரமாணம் 571(2) இல் காட்டப்பட்டுள்ளவாறு வருமானத்திற்கு செலவு | நீண்டகாலம் முதல் வழங்குனர்களுக்கு தீர்க்கப்படாதிருந்த மீதிகள் |

| | | |
|---|---|---|
| ரூபா 13,887 மில்லியன் தொகையில் ரூபா 80.50 மில்லியன் தொகை 02 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் தீர்க்கப்பட்டிருக்காததுடன், 2021 ஆகஸ்ட் 30 திகதி அளவில் அவற்றில் ரூபா 5.03 மில்லியன் தொகை மாத்திரம் தீர்க்கப்பட்டமையால் தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் காணப்பட்ட மீதி ரூபா 75.47 மில்லியன் ஆகும். இவை நூற்றிற்கு நூறு நாணயப் பத்திரப் பெறுமதி மற்றும் தடுத்து வைத்தல் பணம் அடங்கியுள்ளது. | வைத்த பின்னர் திருப்பி பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளும் கோரிக்கைகளை குறைத்துக் கொள்வதற்காக விசாரணை மேற்கொள்வதற்கும், வருமானத்திற்கு செலவு வைத்தல் 3 வருடங்களுக்கு பின்னர் மேற்கொள்வதற்கும் கொள்கை ஒன்று என நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | தொடர்பாக கண்டறிந்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் பிரிவு 10(5) | அரச கூட்டுத்தாபனங்களின் மிகைகள் ஒவ்வொரு ஆண்டிலும் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் பின்னர் மீதியாகிய தேறிய மிகை வருமானம் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதற்கு முன்னர் திறைசேரியினால் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தி கூட்டுத்தாபனத்தினால் திறைசேரிக்கு வழங்க வேண்டிய இலாபப் பங்கினை அறிவிக்கப்படுவதுடன் அதன் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என, மற்றும் இவ் வருடம் இது வரை திறைசேரியினால் அவ்வாறு கோரிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என. | நிதி அதிகார சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 105 | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 121.89 மில்லியன் கிரயத்தை உடைய முன்னைய ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது காலவதியாகிய இருப்புக்கள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறு ரூபா 33.43 மில்லியன் கிரயத்தை உடைய | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்னைய ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது தரக் குறைவான இருப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 135,136,137,138 மற்றும் 139 | கூட்டுத்தாபனத்தின் செலவுகளுக்காக அதிகாரம் அளித்தல், அங்கீகரித்தல், சான்றுபடுத்துதல் மற்றும் கொடுப்பனவு செய்தல் ஆகியவற்றிற்கான நிதி அதிகார கையளிப்பு எழுத்துமூலம் வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நிதி அதிகாரக் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன் காசோலைகளுக்கு கையொப்பமிடுவதற்கான அதிகாரம் மாத்திரம் சாட்டப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்கள் 135,136,137,138 மற்றும் 139 இணங்க மற்றும் கூட்டுத்தாபனத்தின் நிருவாக முறைமையை நேரொத்ததாக பொருத்தமான செய்முறை ஒன்று எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (iii) | நிதிப் பிரமாணம் 210(I) | கூட்டுத்தாபனத்தின் ஒசுசலகளுக்கு மருத்துவ வழங்கல்களை வழங்கும் வழங்குனர்கள் கூட்டுத்தாபனத்திற்கு அவர்களின் கூறுவிலைகளை சமர்ப்பிக்கும் போது 60 நாட்களுக்குள் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டால் இன்வொயிஸ் பெறுமதியில் 5 வீத கழிவொன்று வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், குறிப்பிட்ட கொடுப்பனவுகள் 60 நாட்களுக்குள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் தெரிவுப் பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்ட 58 இன்வொயிஸ்கள் தொடர்பாக இழந்திருந்த கழிவுத் தொகை ரூபா 311,796 தொகை ஆக காணப்பட்டதுடன், பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. வழங்குனர்களிடம் கழிவுகள் பெற்றுக்கொள்ளும் இணக்கப்பாடொன்று காணப்படுகின்றது எனவும், அது தொடர்பாக செயற்பட வேண்டிய முறை எவ்வாறு என உயர் உத்தியோகத்தர்களிடம் எழுத்துமூலம் அல்லது வாய்மொழி மூலம் அறிவுரைகள் கணக்குப் பிரிவின் உரிய உத்தியோகத்தர்களுக்கு கிடைத்திருக்கவில்லை எனவும், தற்போது இது தொடர்பாக அந்த வழங்குனர்களின் இன்வொயிஸ் பத்திரங்களுக்காக விரைவாக கொடுப்பனவு செய்வதற்கு நடைமுறை | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருந்து அப் பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் 60 நாட்களுக்கு முன்னர் வழங்குனர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களிலும் கூட வழங்குனர்களினால் வழங்கப்படும் 5 சதவீத கழிவின் நலன்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் தெரிவுப் பரிசோதனைக்கு ஆளாக்கிய 10 இன்வொயிஸ்கள் தொடர்பாக இழந்திருந்த கழிவுத் தொகை ரூபா 36,556 தொகையாகும். | ஒன்று செயற்படுத்துவற்கு அறிவுரை வழங்கப்பட்டு தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளது என. | |
| (iv) | நிதிப் பிரமாணம் 211 | அனைத்துப் பொறுப்புக்களும் அவை ஏற்பட்ட உடனே குறித்துக்கொள்ள வேண்டியதுடன், சேவைகள் நிறைவேற்றப்பட்ட அல்லது தேவையான வழங்கல்கள் அல்லது அதன் பின்னர் கூடிய விரைவில் அதற்கான கொடுப்பனவு மேற்கொள்ளக் கூடிய விதமாக வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கட்டளைகள் போன்ற பொறுப்புக்கள் தொடர்பாக குறிப்புக்கள் நாளதுவரை வைத்துக்கொள்வதற்கு மற்றும் இன்வொயிஸ் கிடைத்ததுடன் சரி பார்க்கப்பட்டு தாமதம் இன்றி கொடுப்பனவுக்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். கூட்டுத்தாபனத்தில் காணப்படுகின்ற நடைமுறை செயற்பாடுகளின் படி பொறுப்புகள் ஏற்பட்ட உடனே பதிவு செய்ய முடியாமல் காணப்படுகின்றது எனவும், மற்றும் கணக்குப் பிரிவிற்கு கிடைத்த பின்னர் உடனடியாக பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும், கிடைக்கப் பெறுகின்ற அறிவுரைகளின் படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (v) | நிதிப் பிரமாணம் 384(3) | கிடைக்கக் கூடிய அனைத்து காசோலை புத்தகங்கள் தொடர்பான விபரங்கள் அதாவது, அது கிடைத்த திகதி, அதிலுள்ள காசோலைகளின் எண்ணிக்கை மற்றும் அந்த புத்தகத்திற்குரிய அச்சிடப்பட்ட இலக்கம் | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். தற்போது நிதிப் பிரமாணங்கள் 384 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | காசோலைகள் எழுதுவதற்காக அலுவலகத்திற்கு அந்த காசோலை புத்தகம் வழங்கிய திகதி, புத்தகத்தின் கடைசி காசோலை எழுதிய திகதி மற்றும் அடியிதழ் புத்தகம் அழிக்கப்பட்ட திகதி என்பவற்றை உட்படுத்தி பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | | |
| (vi) நிதிப் பிரமாணம் 388(1) | தபால் மூலம் அனுப்பப்படும் அனைத்து காசோலைகள் தொடர்பான விபரங்கள் காசோலை எழுதிய திகதி, காசோலை இலக்கம், அதற்கான பணம் செலுத்தும் வங்கி, அதனை பெற்றுக் கொள்ளும் நபர், காசோலையின் தொகை, உறுதிச்சான்று இலக்கத்துடன் தொடர்பு, அனுப்பப்பட்ட திகதி, பணம் கிடைத்தது என அறிவிக்கப்பட்ட திகதி மற்றும் அனுப்புவது தொடர்பாக பொறுப்பாக உள்ள உத்தியோகத்தரின் சுருக்கக் கையெழுத்து ஆகிய விபரங்கள் அடங்கக் கூடிய விதமாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என, தற்போது நிதிப் பிரமாணம் 388 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என, தபால் மூலம் அனுப்பப்படும் காசோலைகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று காசோலை வழங்கும் உத்தியோகத்தரினால் பேணப்பட்டு வருகின்றது என மற்றும் தற்போது இந்தப் பதிவேடு நாளது வரை ஆக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றது என. | - மேற்படி - |
| (vii) நிதிப் பிரமாணம் 389(ஆ) | கையில் ஒப்படைக்கப்படும் அனைத்து காசோலைகளும் அதனை பெற்றுக் கொண்டமைக்கான அதன் இலக்கம், பணத்தின் எண்ணிக்கை குறுக்குக்கோடு இடப்பட்டதா அல்லதா, அதற்காக பணம் பெற்றுக் கொள்ள வேண்டிய வங்கி, உறுதிச் சீட்டு இலக்கம் மற்றும் ஒப்படைக்கப்பட்ட திகதி ஆகிய விபரங்கள் அடங்கிய ஆவணம் ஒன்று பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் காசோலை கையில் ஒப்படைத்தல் தொடர்பாக அவ்வாறான ஆவணம் ஒன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என, காசோலைகள் வழங்கும் போது காசோலைகள் பெற்றுக் கொண்டமைக்காக காசோலைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் முன்பக்கத்தில் பெறுவோனின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் கையொப்பம் போலவே குறிப்பிட்ட உறுதிச் சீட்டு இலக்கமும் குறிப்பிட்ட பதிவேட்டில் பதியப்படுகின்றது என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காசோலைகளை உரிமையாளருக்கு வழங்குவதற்காக பேணப்பட்டு வரும் பதிவேட்டில் கொடுப்பனவு உறுதிச் சீட்டு இலக்கம், இன்வொயிஸ் இலக்கம், கட்டளைகள் இலக்கம் ஆகிய அத்தியவசியமான தகவல்கள் ஏதும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் படி காசோலை வழங்கப்படுவது எந்த இன்வொயிஸ‟க்காக மற்றும் எந்த உறுதிச்சீட்டின் கீழ் ஆகிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (viii) | நிதிப் பிரமாணம் 391(இ) | காசோலை ஒன்றின் செல்லுபடியாகும் தன்மையை நீடிக்கும் போது காசோலைகளில் கையொப்பம் இடும் உத்தியோகத்தர்களினால் அந்த காசோலை அடியிதழ் புத்தகத்திலும், அதற்கு முந்திய மாதத்தின் வங்கி இணக்கக் கூற்றில் காசாக்கப்படாத காசோலைகள் தொடர்பான அட்டவணையில் குறிப்பிட்ட விடயத்திற்கு எதிராகவும் அவ்வாறு செல்லுபடியாகும் தன்மையை நீடிக்கப்பட்டதென சிவப்பு மையினால் எழுதப்பட்டு தனது சுருக்கக் கையெழுத்து இடப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தின் காசோலைகளில் செல்லுபடியாகும் காலத்தை நீடிக்கும் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என, இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் பதிவேட்டில் பதியப்படுகின்றது எனவும் மற்றும் அடியிதழ்களில் பதியப்படுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | - மேற்படி - |
| (ix) | நிதிப் பிரமாணம் 392(ஆ)(iii) | காசோலைகள் காணாமல் போனது என அல்லது கண்டுகொள்ள முடியாதுள்ளது என பணம் பெறுவோரால் அறிவிக்கப்பட்டால் நிதிப் பிரமாணங்களில் காட்டப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் இழப்புக் காப்புறுதி | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என, இழப்பு காப்புறுதிக் கடிதம் பெற்றுக் கொள்ள முடியாவிடின் இது தொடர்பாக திறைசேரிக்கு அறிவித்து கட்டளை ஒன்று பெற்றுக்கொள்வதற்காக | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடிதம் ஒன்று பெற்றுக் கொண்ட பின்னர் மாத்திரம் அதற்குப் பதிலாக புதிய காசோலை ஒன்று வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் இழப்பு காப்புறுதிக் கடிதம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| | (x) நிதிப் பிரமாணம் 394(ஆ)(i) | ஏதேனும் காரணத்தினால் காசோலை ஒன்று இரத்து செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கு பதிலாக வேறொறு காசோலை வழங்கப்படாவிடின் காசோலையின் அடியிதழில் மற்றும் காசேட்டில் குறிப்பிட்ட பதிவுக்கு எதிராக இரத்து செய்தல் தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என, இரத்து செய்யப்படும் காசோலை பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றது என மற்றும் அடியிதழில் குறிப்பிடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | - மேற்படி - |
| | (xi) நிதிப் பிரமாணம் 571 | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட, வைப்புச் செய்யப்பட்ட திகதியில் இருந்து 2 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 1.38 மில்லியன் தொகைக்கான வைப்புக்களை தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 571(2) இல் காட்டப்பட்டுள்ளவாறு வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட பின்னர் மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கைகளை குறைத்துக் கொள்வதற்காக வினவுவதற்கு வருமானத்திற்கு செலவு வைத்தல் 3 வருடங்களுக்கு பின்னர் மேற்கொள்வதற்கும் கூட்டுத்தாபனம் கொள்கை ஒன்றாக செயற்படுத்தப்படுகின்றது என. | - மேற்படி - |
| (இ) | 2020 ஏப்ரல் 20 திகதிய 758 ஆம் இலக்கங் கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானம் | 2020 மே 15 திகதி முதல் வழங்குனர்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளல்களை முறைப்படுத்துவதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த குழுவின் அங்கீகாரம் இன்றி | தற்போது குழுக்களின் முன்னேற்றம் பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | பணிப்பாளர் சபையின் தீர்மானங்களுக்கு இணங்க அலுவல் ஒழுங்குபடுத்த வேண்டும். |

வழங்குனர்களுக்கு 2020 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரை 07 சந்தர்ப்பங்களில் ரூபா 40.91 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,969,223,517 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,663,869,219 தொகை ஆகும். அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 305,354,298 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு விற்பனை வருமானம் 22 சதவீதத்தினால் அதிகரித்திருத்தல் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான செலவு விடயங்களில் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டின் வங்கி மேலதிகப் பற்று வட்டிச் செலவுகள் முறையே ரூபா 317,470,491 தொகை மற்றும் ரூபா 686,878,333 தொகையாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் அந்த செலவுகள் 116 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கல்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும் அதற்கான பணம் பெற்றுக் கொள்வதில் தாமதம் காரணத்தினால் வங்கி மேலதிகப் பற்று வசதிகள் அதிகமாக பெற்றுக் கொள்வதற்கு காரணமாக இருந்தது.

முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் படிச் செலவுகள் முறையே ரூபா 786,727,155 தொகை மற்றும் ரூபா 956,389,952 தொகை ஆகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அந்த செலவுகள் 21 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் கூட்டு உடன்படிக்கையின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த சம்பளங்கள், வேதனங்கள் மற்றும் படிகளை அதிகரித்தல் பிரதானமாக இதற்கு காரணமாக இருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மொத்த இலாப விகிதாசாரம் மற்றும் தேறிய இலாப விகிதாசாரம் முறையே 0.7 சதவீதத்தினால் மற்றும் 0.2 சதவீதத்தினாலும், கடன்பட்டோர் புரள்வு விகிதாசாரம் 0.3 தவணைகளினாலும் குறைந்திருந்ததுடன் கடன் அறவீடு செய்யப்படும் காலம் 22 நாட்களினால் அதிகரித்திருந்தது. இது தொடர்பாக கவனம் செலுத்தி கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு அலுவல்களை செயற்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழங்குனர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் குறிப்பிட்ட கொள்கை ஒன்று மற்றும் வெளிப்படைத் தன்மையுடைய முறையான செய்முறை ஒன்று | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என, நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிதிப் பிரமாணங்களுக்கு நேரொத்தவாறு நடைமுறையில் உள்ள செய்முறையினை திருத்தி அமைத்து அந்த |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டிருக்காமையால் ஏதேனும் வழங்குனர் ஒருவருக்கு முக்கியத்துவம் வழங்குவதற்கு அல்லது பிரதிகூலமான தாக்கங்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புகள் காணப்பட்டது. | எனவும் மற்றும் அனைத்து கணக்காளர்களுக்கு தேவையானவாறு அதிகாரம் கையளிப்புச் செய்யப்பட்டு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | செய்முறைக்கு ஏற்ப செயற்பட வேண்டும். |
| (ஆ) | காசோலைகள் அச்சிடப்பட்ட பின்னர் முதலாவது மற்றும் இரண்டாவது கையொப்பங்களுக்காக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு சமர்ப்பித்தல் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதே போல் 1 மில்லியனை விட கூடிய பெறுமதியுடைய காசோலைகளில் முதலாவது கையொப்பத்திற்காக ஒரு உத்தியோகத்தருக்கு மாத்திரம் அதிகாரக் கையழிப்பு செய்யப்பட்டிருந்தது. மேலும் இன்வொயிஸ்கள் கிடைக்கக் கூடிய முறைப் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. காசோலைகள் கையொப்பம் இடும் போது உரிய பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தரினால் அந்த காசோலை தனக்கு கிடைக்கப்பட்ட ஒழுங்கு முறைப்படி கையொப்பம் இடப்பட்டு மீண்டும் திருப்பி அனுப்புதல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் சில சந்தர்ப்பங்களில் அதற்காக வழமையல்லாத காலவரையறைகள் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறு காசோலைகளின் செல்லுபடியாகும் காலவரையறை மிகைப்பதற்கு முன்னர் காசோலைகள் கையொப்பம் இடப்படாத காரணத்தினால் காசோலைகள் மீண்டும் மீண்டும் செல்லுபடியாக்குவதற்கு நேரிட்டிருந்ததுடன், மீள் செல்லுபடியாக்கும் காசோலைகளின் எண்ணிக்கை கடந்த பல வருடங்களாக வழமையல்லாதவாறு அதிகரித்திருந்தது. காசோலைகள் மீள் செல்லுபடியாக்குவதற்கான காரணத்தை பதிவு செய்யப்பட்டிருக்காமையால் அது தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ள முடியாதிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மருத்துவ வழங்கல் பிரிவிற்கு தரக்குறைவான மற்றும் சேதமடைந்த மருந்துகள் வழங்கியிருத்தல் மற்றும் மருந்துகள் குறைவாக வழங்கியிருந்த காரணத்தினால் மேற்கொள்ளப்பட்ட கிரயம், நிர்வாகக் கட்டணம் மற்றும் அந்த இருப்பினை அழிப்பதற்கான செலவுகளை வழங்குனர்களிடம் அறவீடு செய்வதற்காக 2020 திசெம்பர் 31 திகதி அளவில் வழங்கப்பட்டிருந்த வரவுப் பத்திரங்களின் பெறுமதி ரூபா 2,239.86 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் எனினும் அவற்றில் காணப்பட்ட ரூபா 807.48 மில்லியன் தொகை 2021 செப்தெம்பர் 30 திகதி வரை அறவீடு செய்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்தது. அவற்றில் 2021 செப்தெம்பர் 30 திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்காத ரூபா 680.60 மில்லியன் தொகை கரைநிரழ்படுத்திய வழங்குனர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்தமையால் அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது. அதே போல் அதில் அடங்கியுள்ள தரக் குறைவான ரூபா 95.54 மில்லியன் கிரயத்தையுடைய மருத்துவ வழங்கள் 14 விடயங்கள் 2020 ஆம் ஆண்டிற்காக மருத்தவ வழங்கல் பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த மருந்துகள் ஆகும். | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்த வரவுப் பத்திரங்களின் பெறுமதி ஆகிய ரூபா 2,239.86 மில்லியன் தொகையில் ரூபா 24.73 மில்லியன் தொகைக்கான வரவுப் பத்திரங்கள் பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தது என, மீதித் தொகையில் ரூபா 146.92 மில்லியன் தொகைக்கான வரவுப் பத்திரங்கள் 2021 செப்தெம்பர் 30 திகதி வரையான காலப் பகுதியில் வழங்குனர்களிடம் அறவிடப்பட்டிருந்தது எனவும், 2021 செப்தெம்பர் 30 திகதி அளவில் கரைநிரழ்படுத்திய வழங்குனர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த வரவுப் பத்திரங்களின் பெறுமதி ரூபா 680.60 தொகையாக காணப்பட்டது எனவும், அந்தப் பெறுமதியை அறவீடு செய்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தின் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் மற்றும் 2020 ஆண்டிற்காக மருத்துவ வழங்கல் பிரிவிற்காக கொள்வனவு செய்திருந்த இருப்புக்களில் தரக் குறைவான விடயங்களின் இருப்புப் பெறுமதியில் தொடர்ந்தும் அறவீடு செய்ய வேண்டிக் காணப்பட்ட பெறுமதி ரூபா 95,538,382 தொகை மாத்திரம் என. | தரக் குறைவான மற்றும் சேதமடைந்த மற்றும் மருந்து குறைவுகளில் கிரயத்தில் இருந்து அறவீடு செய்யப்படாத தொகை வழங்குனர்களிடம் அறவீடு செய்தல் செயற்திறனுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது, மருந்துவ வழங்கல் பிரிவினால் தற்காலிகமாக மறுக்கப்பட்டிருந்த மருத்துவ வழங்கல் 07 விடங்களின் கிரயம் ரூபா 30.64 மில்லியன் தொகை மற்றும் சேதமடைந்திருந்த மருத்துவ வழங்கல் 06 விடயங்களின் கிரயம் ரூபா 402,948 தொகை 2021 செப்தெம்பர் 30 திகதி அளவிலும் அறவீடு செய்வதற்கு அல்லது அந்த விடயத்தை மீண்டும் பெற்றுக் | 2020 ஆண்டிற்காக மருத்துவ வழங்கல் பிரிவிற்காக கொள்வனவு செய்திருந்த இருப்புக்களில் ஒரு பகுதி மறுக்கப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 11.76 மில்லியன் தொகை வழங்குனர்களிடம் அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட வரவுப் பத்திரங்கள் அனுப்பப்பட்டுள்ளது என, இது | தரக் குறைவான மற்றும் சேதமடைந்த மருந்துகளின் கிரயத்தில் அறவீடு செய்யப்படாத தொகையினை வழங்குனர்களிடம் அறவீடு செய்வதற்கு செயற்திறனுடன் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்தது. | வரை தீர்க்கப்படாதிருந்த இருப்புக்களின் பெறுமதி ரூபா 18.86 மில்லியன் தொகை மாத்திரம் ஆகும் என மற்றும் 2020 ஆண்டிற்காக மருத்துவ வழங்கல் பிரிவிற்காக கொள்வனவு செய்திருந்த இருப்புக்களில் இருப்புக்கள் சேதம் அடைந்தமையால் மறுக்கப்பட்டிருந்த ரூபா 402,948 தொகை தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது என. | |
| (உ) | சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி, கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஆனால் 2020 ஜனவரி 01 திகதியளவில் தரக் குறைவான, காலவதியான மற்றும் சேதமடைந்த மருந்துகளின் மொத்த கிரயம் ரூபா 116.86 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது தரக் குறைவான, காலவதியான மற்றும் சேதமடைந்த மருந்துகளின் மொத்தக் கிரயம் ரூபா 103.65 மில்லியன் தொகையாக இருந்தது. கடந்த ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது தரக் குறைவான மருந்துகளின் மொத்தக் கிரயம் ரூபா 33.43 மில்லியன் தொகையில் ரூபா 16.16 மில்லியன் தொகை 2021 நவம்பர் 02 திகதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. மேலும் கடந்த ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது மருந்துகள் காலவதியாதல் மற்றும் சேதமடைவதினால் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கொள்ள நேரிட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 121.89 மில்லியன் தொகை ஆகும். | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | தரக் குறைவான மருந்துகளின் பெறுமதியை வழங்குனர்களிடம் அறவீடு செய்வதற்கும் மருந்துகள் காலவதியாவதற்கான காரணத்தை கண்டறிந்து பரிகாரம் காண்பதற்கு மற்றும் அந்த காரணங்களுக்கு பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினர்களிடம் நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2005 ஆண்டின் போது சீனாவில் இருந்து இறக்குமதி செய்து மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த Hypodermic Syringes 5ml & 10ml விடயம் 6 மில்லியன் தொகை தரக் குறைவானவையாக இருந்தமையால் | ரூபா 17.51 மில்லியன் தொகைக்கான நட்டத்தை வழங்குனர்களிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணையின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டிருந்த | நட்டத்தை பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்காக செயற்திறனுடன் செயற்பட வேண்டும். |

கூட்டுத்தாபனத்திற்கு மேற்கொள்ள நேரிட்டிருந்த ரூபா 17.51 மில்லியன் நட்டத்தை குறிப்பிட்ட காலப் பகுதியில் வழங்குனரிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக நடாத்தப்பட்டிருந்த 02 ஒழுக்காற்று விசாரணைகளின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டு இருந்த அப்போதைய இறக்குமதி முகாமையாளராக கடமையாற்றி பெண் உத்தியோகத்தரை இந்த நட்டத்திற்கான பொறுப்புக்கு ஆளாக்கப்பட்டு 2019 மே 15 திகதி ஒழுக்காற்று கட்டளை ஒன்று வழங்கப்பட்டிருந்தது எனினும் 2021 செப்தெம்பர் 30 திகதி வரை நட்டத்தை அறவீடு செய்வதற்காக கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்தது.

பெண் இறக்குமதி முகாமையாளருக்கு 2019 மே 15 திகதி ஒழுக்காற்று கட்டளை ஒன்று வழங்கப்பட்டது என, அது தொடர்பாக குற்றவாளி ஆக்கப்பட்ட பெண் உத்தியோகத்தரினால் சமர்க்கப்பட்டிருந்த மேன்முறையீட்டின் படி, நடாத்தப்பட்டிருந்த முறையான ஒழுக்காற்று விசாரணை இரண்டினதும் தீர்மானங்கள் மீள் விசாரணை செய்வதற்காக பணிப்பாளர் சபை தீர்மானிக்கப்பட்டிருந்தது என, அந்த மீள் விசாரணை அறிக்கையின் படி குற்றவாளியான பெண் உத்தியோகத்தருக்கு எதிராக காணப்பட்ட 05 குற்றங்களில் 03 குற்றங்களுக்கு குற்றவாளி எனவும் 02 குற்றங்கள் ஒப்புவிக்க முடியாமல் இருந்தது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது, நட்டத்தை வழங்குனர்களிடம் அறவீடு செய்வதற்காக பொறுப்பு சொல்ல வேண்டியவர் குற்றம் சாட்டப்பட்டுள்ள பெண் உத்தியோகத்தர் என குற்றம் சாட்டப்பட்டிருந்தமைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த சாட்சிகளின் படி அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது என, இதன் காரணத்தினால் அவ்வாறு அறவீடு செய்வதற்காக யார் பொறுப்பு சொல்ல வேண்டும் என்பதை கண்டறிவதற்கு மீண்டும் முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்று நடாத்துவதற்காக சுகாதார அமைச்சின் விசாரணை பிரிவின் விசாரணை உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.

## 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைப்பாடுகளுக்காக 2018/2019 ஆண்டுகளின் போது Dopamine Injection 200mg/5 ml , 120,000 அலகுகள் கொள்வனவு செய்வதற்காக சர்வதேச போட்டி முறைமையின் கீழ் விலைகூறல் அழைக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்டிருந்த வழங்குனர் ஒருவருக்கு பெறுகை வழங்கப்பட்டிருந்ததுடன், ஒன்று ரூபா 33.43 வீதம் 120,000 அலகுகளுக்கான மொத்தக் கிரயம் ரூபா 4.01 மில்லியன் தொகையாக இருந்தது. இந்த பிரதான கட்டளை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) இந்த பிரதான கட்டளை தாமதம் அடைந்த காரணத்தினால் Dopamine Injection 200mg/5 ml அலகு ஒன்று ரூபா 940 வீதம் 12,994 அலகுகள் பிரதான வழங்குனரின் உள்நாட்டு முகவரிடம் மற்றும் 14,995 அலகுகள் மற்றும் வேறு வழங்குனர் ஒருவரிடம் மொத்தத் தொகை ரூபா 26.31 மில்லியன் தொகை செலவிடப்பட்டு உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பிரதான கட்டளையின் விலை மற்றும் உள்நாட்டு சந்தையின் விலைகள் இடையே முரண்கள் 2,712 தொகையாக காணப்பட்டதுடன், அது தொடர்பாக தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் மற்றும் பெறுகைக் குழுவின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 7.4.1 இன் பிரகாரம், தேவையான முறையான அங்கீகாரம் ஒன்று பெற்றுக் கொள்வதற்காக போதியளவு காலம் வழங்கப்படுமாறு விலை கூறல்களுக்கான மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காமையால், வழங்குனரின் தாமதமும் பிரதான கட்டளை தாமதமாவதற்கு காரணமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. எனினும் பெறுகை நிபந்தனைகளின் பிரகாரம் வழங்குனரின் தவறு ஒன்றின் காரணமாக வழங்கல் தாமதம் | விலைகூறல் மதிப்பாய்வு தாமதம் ஏற்பட்டிருந்தது என ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்ட கோவை தொழிநுட்ப பிரிவிற்கு 2018 ஆகஸ்ட் 20 திகதி கிடைத்திருந்தது எனவும், விலைகூறல் மதிப்பாய்வு 2018 செப்தெம்பர் 21 திகதி மேற்கொள்ளப்பட்டது எனவும், பெறுகை நேரசூசியின் படி வழங்கியிருந்த காலப் பகுதியுள் (4 வாரங்கள்) விலைகூறல் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும் மேற்கூறிய காலப்பகுதியில் தொழிநுட்ப பிரிவினால் சுமார் 1800 அண்மித்த எண்ணிக்கையான கோவைகளின் விலைகூறல் மதிப்பாய்வு செய்தல், மதிப்பாய்வு அறிக்கை தயாரித்தல், ஆய்வுகூட தர அறிக்கை பரிசோதனை செய்தல் மற்றும் ஏனைய கடமை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும், குறிப்பிடப்பட்டுள்ள மிகைக் கிரயம் ரூபா 26.31 மில்லியன் தொகையினை அறவீடு செய்வதற்காக வரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது | பிரதான கட்டளை தாமதம் அடைவதற்கான பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை தீர்மானிப்பதற்கும் செலவிடப்பட்டிருந்த மிகைக் கிரயத்தை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடைந்தால் உள்நாட்டு கொள்வனவு மேற்கொள்ள வேண்டி நேரிட்டிருந்த மிகை கிரயத்தில் இருந்து ரூபா 23.23 மில்லியன் தொகை பிரதான வழங்குனரிடன், அறவீடு செய்திருக்காததுடன் விலைகூறல் மதிப்பாய்வு தாமதம் தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எனவும் மற்றும் வழங்குனர் அந்த பெறுமதியினை செலுத்துவதற்காக எழுத்துமூலம் இணங்கியுள்ளார் எனவும். | |
| (ii) | பிரதான பெறுகைக்காக விலைகூறல்கள் சமர்ப்பித்திருந்த விலைகூறல்தாரர்கள் இருவரிடம் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.3.11 (ஆ) பிரகாரம் விலைகூறல் பாதுகாப்பு முறி சமர்ப்பித்திருக்கவில்லை. | விலைகூறல்தாரர்கள் இருவரினால் விலைகூறல் பாதுகாப்பு முறி சமர்ப்பித்திருக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டு மதிப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது என. | அரச பெறுகை வழிகாட்டல் கோவை மற்றும் அவ்வப்போது நாளதுவரை ஆக்கப்படும் அதன் திருத்தங்களுக்கு இணங்க பெறுகை முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படாமையால் ஏற்படுகின்ற சேதங்கள் அல்லது நட்டங்கள் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினருக்கு எதிராக மிகைவிதிப்பு செய்யப்பட வேண்டும். இந்த பெறுகை தொடர்பாக முறையான சுதந்திரமான விசாரணை ஒன்று நடாத்தி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்படும் இந்தியா ஆய்வுகூடம் ஒன்றின் மூலம் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னர் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு பதிலாக கூட்டுத்தாபனத்தின் ஆய்வு கூடத்தினால் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட வேண்டுமென பிரதான பெறுகையின் வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக வழங்குனர் விருப்பமின்மை தெரிவித்திருந்தமை தொடர்பாக கவனம் செலுத்தாமல் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தது. | கட்டளைகள் வழங்கும் போது கூட்டுத்தாபனத்தின் ஆய்வு கூடத்தின் மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருக்கவில்லை எனவும் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னர் மாதிரிகள் மாத்திரம் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், கூட்டுத்தாபனத்தின் ஆய்வு கூடத்தில் பரிசோதனை மேற்கொள்வதற்கான முன்மொழிவிற்கு வழங்குனர் இணங்கியிருக்காமையால் கூட்டுத்தாபனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆய்வு கூடம் | பெறுகை செய்முறையுள் தேவையான எச் சந்தர்ப்பத்திலும், நிறுவனத்திற்கு தேவையானவாறு வழங்கப்படும் மருந்துகளின் நியமங்களை பரிசோதனை செய்யும் இயலுமை பெறுகை நிறுவனத்திற்கு உரித்தாகக் கூடிய விதமாக செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iv) உள்நாட்டு சந்தையில் இருந்து கொள்வனவு செய்யும் விலைகூறல் மதிப்பாய்வு செய்யும் போது கூறுவிலைகளை திருத்துவதற்காக விலைகூறல்தாரர்களை அழைப்பதற்காக பெறுகைக் குழு தீர்மானம் எடுத்திருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. அதே போல் பெறுகை குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த திகதிக்கு முன்னைய திகதி கட்டளை வழங்கப்பட்டிருந்தது. பெறுகை நிபந்தனைகளின் பிரகாரம் இந்த தடுப்பூசி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கும் போதும் குறைந்த அளவு 12 மாதங்கள் ஆயுட்காலம் உடையவையாக இருக்க வேண்டியிருந்த போதிலும் 1,200 தடுப்பூசிகளின் ஆயுட் காலம் 10 மாதங்கள் மாத்திரமே காணப்பட்டது. | ஒன்றில் இருந்து பரிசோதனை மேற்கொண்டு இருப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது எனவும். காட்டப்பட்டுள்ள தீர்மானம் அப்போதைய தலைவர் குறிப்பிட்ட பெறுகைத் தீர்மானத்தை அங்கீகரிக்கும் போது எடுக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் பெறுகைக் குழுவும் அந்தத் தீர்மானத்திற்கு அணவல் அங்கீகாரம் வழங்கியிருந்தது எனவும் குறைந்த ஆயுட்காலத்தை உடைய இருப்பு மருத்துவ வழங்கல் பிரிவினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகை குழு தீர்மானங்களுக்கு இணங்க பெறுகை நிபந்தனைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக 2018 ஆண்டின் போது ரூபா 1.64 மில்லியன் தொகை செலவிடப்பட்டு Pioglitazone Hydrochloride Tablets 15 mg மருந்துகள் 10*10 அளவிலான பொதிகள் 17,700 அலகுகள் மற்றும் ரூபா 10.38 மில்லியன் செலவிடப்பட்டு 5*10 அளவிலான பொதிகள் 66,300 அலகுகள் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>(i) 2017 ஒக்தோபர் 31 திகதி கொள்வனவு தேவைக் கோரிக்கை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் கடந்த நெறுங்கிய 12 மாத கால வரையறையுள் இந்த மருந்தின் 10*10 மற்றும் 5*10 பொதிகள் அலகுகளின் உண்மையான வருடாந்த விற்பனை எண்ணிக்கை முறையே 12,232 தொகை மற்றும் 63,030 தொகையாக இருந்தது. பொதிகள் எண்ணிக்கை இரண்டினதும் இந்த மருந்து வகையின் விற்பனை குறைந்துகொண்டு செல்லும் சந்தர்ப்பத்தில் 10*10 மற்றும் 5*10 அளவுகளில் பொதிகளில் இருந்து முறையே 13,000 அலகுகள் மற்றும் 46,862 அலகுகள் ஆக மொத்தம் 59,862 அலகு இருப்பொன்று | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பட்டிருந்த நட்டத்திற்காக பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்கண்டு அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்திடம் காணப்பட்ட போது அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் மேலும் 10*10 அளவினதான பொதிகள் 36,000 அலகுகள் மற்றும் 5*10 அளவிலான பொதிகள் 48,000 அலகுகள் கட்டளை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதேபோல் கட்டளையின் படி 6 மாத கால காலவீச்சில் கட்டளைகள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் மொத்த கட்டளையின் 69.5 சதவீதம் தொகை 2 ½ மாத காலவீச்சில் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அக் காரணமாக ரூபா 1.61 மில்லியன் கிரயத்தை உடைய 5*10 அளவான பொதிகள் 10,353 அலகுகள் மீளாய்வாண்டின் போது காலவதியாகி இருந்தது. மேலும் ரூபா 1.38 மில்லியன் கிரயத்தை உடைய 5*10 அளவான 8,914 அலகுகள் இலவசமாக வெகுமதியாக வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ii) மருந்து தேசிய ஔதட ஒழுங்குறுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாமல் இருந்த போதிலும் முதலாவது குறைந்த விலைகூறல் சமர்ப்பித்திருந்த விலைகூறல்தாரருக்கு மொத்தக் கட்டளையின் 60 சதவீதம் வழங்கப்பட்டிருந்தது. அந்த விலைகூறல்தாரரினால் 1987 இன் 03 இலக்க பொது ஒப்பந்த வேலை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் (PCA 03) உம் சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும் ஒப்பந்த வேலை வழங்கும் கடிதத்தின் படி, மருந்தின் பொதி செய்யும் லேபலுக்காக கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காத பொதி செய்யும் லேபல் உடன் முதலாவது மருந்து இருப்பு என 10*10 அளவிலான பொதிகள் 17,700 அலகுகள் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெறுகை செய்முறையிற்கு பொருத்தமாக சட்டதிட்டங்கள் மற்றும் உடன்படிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(இ) மருத்துவ வழங்கல் பிரிவினால் 2018 ஆண்டிற்கான தேவைப்பாடுகள் என இனங்கண்டிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 2,450,000 தொகைக்கான Epoetin Injection 1,000IU / Vial pre-filled syringes (Recombinant Human Erythropoietin BP) தடுப்பூசியில் 7,000 அலகுகள் ரூபா 44,640,705 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (i) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2.3 தொடர்பாக 31 ஆம் இலக்கம் கொண்ட பின்னிணைப்பின் பிரகாரம் சர்வதேச போட்டி கூறுவிலை முறையின் படி மேற்கொள்ளப்படும் பெறுகை அலுவல்கள் 08 வாரங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், இந்த பெறுகை பூர்த்தி செய்வதற்காக 2 வருடங்களை அண்மித்த காலம் எடுக்கப்பட்டிருந்தது. இந்த பெறுகையுடன் தொர்புடைய ஒப்பந்தப் பெறுமதி USD 243,530 தொகைக்கு சமமான ரூபா 43.46 மில்லியன் தொகை எனினும், பெறுகை அலுவல்களுக்காக 2 வருடங்களுக்கு அண்மித்த காலம் எடுக்கப்பட்டிருந்தமையால் கொடுப்பனவு மேற்கொள்ளும் சந்தர்ப்பம் வரை டொலருக்கான ரூபாய் பெறுமதி மாற்றமடைந்தமையால் இந்த பெறுகைக்காக USD 243,530 இற்கு சமனான ரூபா 44.64 மில்லியன் தொகை வழங்குனருக்கு செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. அதன்படி மிகையாக செலுத்த நேரிட்டிருந்த தொகை ரூபா 1.18 மில்லியன் தொகையாகும். | இந்த கொள்வனவுக்காக பொருத்தமான விலைகூறல்கள் சமர்பிக்கப்படாமையால் பல தடவைகள் விலைகூறல் அழைப்பதற்கு நேரிட்டிருந்ததென, அதன்படி சுட்டிக் காட்டப்பட்டுள்ள தாமதம் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிற்கு புறம்பான தவிர்க்க முடியாத தாமதம் ஒன்றாக காணப்பட்டதென மற்றும் காட்டப்பட்டுள்ள தொகையின் வித்தியாசம் செலாவணி வீதாசாரத்தில் ஏற்பட்டுள்ள வித்தியாசம் ஆகும். | அரச பெறுகை வழிகாட்டல கோவை மற்றும் அவ்வப்போது நாளதுவரை ஆக்கப்படுகின்ற அதன் திருத்தங்களுக்கு இணங்க பெறுகை முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) மருத்துவ வழங்கல் பிரிவினால் 2018 ஆண்டிற்காக Epoetin Injection 1000IU/Vial pre-filled syringes 7,000 தொகை கொள்வனவு செய்வதற்காக கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கொள்வனவு தேவைக் கோரிக்கையின் படி இந்த தடுப்பூசியின் ஒரு அலகின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 350 என காட்டப்பட்டிருந்த போதிலும், மதிப்பீட்டுக் கிரயம் மற்றும் | மதிப்பீட்டுக் கிரயம் என காட்டப்பட்டிருந்து மருத்துவ வழங்கல் பிரிவினால் காட்டப்பட்டிருந்த பெறுமதி ஆகும் எனவும், சில சந்தர்ப்பங்களில் அந்த விலைக்கு சமனான விலைகூறல்கள் கிடைத்திருக்கவில்லை எனவும், இந்த பெறுகையில் மூன்று தடவைகள் விலைகள் | பெறுகை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மருத்துவ வழங்கல்களின் மதிப்பீட்டு கூறுவிலை மற்றும் விலைகூறல் கூறுவிலைகள் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டளைக் கிரயம் இடையே 1674 சதவீத முரண்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் 7,000 அலகுகள் ஒரு அலகு ரூபா 6,208.72 வீதம் ரூபா 43.46 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்வதற்காக கட்டளை வழங்கப்பட்டிருந்தது. | அழைக்கப்பட்டு இறுதியாக கிடைத்திருந்த ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரே விலைகூறலுக்காக கட்டளை வழங்கப்பட்டது எனவும், மற்றும் அத்தியவசியமான மருந்தொன்றாகிய இந்த மருந்து அந்த விலைக்கு கொள்வனவு செய்யாவிடின் அந்த மருந்துக்கான தட்டுப்பாடு ஏற்படுவதனை தவிர்க்க முடியாது என. | பெறுகைக்குழு அவர்களின் மதிப்பாய்வுகளின் போது போதிய கவனம் செலுத்த வேண்டும். |
| (iii) | Epoetin Injection 1,000IU, 2,000IU, 4,000IU, 5,000IU மற்றும் 10,000IU/Vial pre-filled syringe ஒரே தடுப்பூசி பல்வேறு மாத்திரைகளாக காணப்பட்டதுடன், 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்காக மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைப்பாடுகளுக்காக இந்த தடுப்பூசியின் 1,000IU இற்கு மேலதிகமாக 2,000IU தடுப்பூசொன்று USD 0.9 தொகை வீதமும், 10,000IU தடுப்பூசியொன்று USD 5.5 வீதமும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த மாத்திரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அலகுக்கான கிரயத்துடன் ஒப்பீடு செய்யும் போது கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்திருந்த Epoetin Injection 1,000IU அலகு ஒன்றிற்கான கிரயம் USD 34.79 வழமையல்லாத விலை ஒன்றெென அவதானிக்கப்பட்டது. | இந்த மாத்திரை முதற் தடவையாக கொள்வனவு செய்திருந்தது இந்த பெறுகையின் போது ஆகும் எனவும், மாத்திரையின் அளவின் படி மாத்திரம் மருந்துகளின் விலைகளை ஒப்பீடு செய்ய முடியாது எனவும், கட்டளைகளின் எண்ணிக்கை மற்றும் உற்பத்தி சிக்கல்கள் போன்ற விடயங்கள் மீது விலைத் தளம்பல்கள் ஏற்படுகின்றது என. | - மேற்படி - |
| (iv) | ஒப்பந்த உடன்படிக்கை 10 பிரிவின் பிரகாரம், மருந்துகள் வழங்கல் 42 நாட்கள் தாமதத்திற்காக USD 8,523.55 தொகைக்கு சமனான ரூபா 1.56 மில்லியன் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு அல்லது செயலாற்றல் பாதுகாப்பு முறி காலவதியாவதற்கு முன்னர் பணம் அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆரம்ப கட்டளை வழங்கப்பட்ட திகதியின் பின்னர் வழங்கலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எடுக்க வேண்டிய இடைக்கால நடவடிக்கைகள் சிலவற்றிற்காக காலம் எடுப்பதுடன், கட்டளை உறுதிப்படுத்தப்பட்ட நாள் முதல் வழங்கப்பட்ட நாணயக் கடிதத்தின் காலவரையறையுள் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்படவில்லை என. | உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (v) 2018 ஆண்டிற்கான கொள்வனவு கட்டளையின் படி Epoetin Injection 1000IU 7,000 தடுப்பூசிகள் கூடிய விரைவில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட வேண்டும் என வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், 2019 ஜூலை 19 திகதிய மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரின் கடிதத்தின் மூலம் இந்த தடுப்பூசி இருப்பு அவசர தேவை என அறிவிக்கப்பட்டிருந்தது. 2018 ஆண்டிற்காக ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையினால் மற்றும் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையினால் இந்த தடுப்பூசிகளில் 3,000 அலகுகளுக்காக மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஜூலை 06 கணக்காய்வுத் திகதி வரை அந்த வைத்தியசாலைகளினால் ஒரு தடுப்பூசி அலகு கூட மருத்துவ வழங்கல் பிரிவினால் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. மேலும், இந்த தடுப்பூசிகளுக்காக மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத 10 வைத்தியசாலைகளுக்கு 906 அலகுகளும் உட்பட 1,388 அலகுகள் விநியோகிகப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2020 ஜூலை 16 திகதி வரை 5,612 அலகு இருப்பொன்று மீதியாக காணப்பட்டது. இதன்படி, இந்த மருந்திற்கான அவசரத் தன்மை ஒன்று காணப்பட்டதென உறுதிப்படுத்த முடியவில்லை. | தாமதம் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிற்கு புறம்பான காரணங்களினால் ஏற்பட்டிருந்தவை எனவும், 2020 பெப்ரவரி 11 திகதி கூட்டுத்தாபனத்தினால் இருப்பு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்ததெனவும், மற்றும் விநியோகம் கூட்டுத்தாபனத்தின் பணிப்பொறுப்பு ஒன்று அல்லாத மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பொறுப்பு ஒன்றாகும் எனவும். | இந்த பெறுகை தொடர்பாக முறையான சுதந்திரமான விசாரணை நடாத்தப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vi) ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையினால் 2018 மற்றும் 2019 வருடங்களுக்காக Epoetin Injection 1000IU தடுப்பூசிகளில் முறையே 100 அலகுகள் மற்றும் 200 அலகுகள் வீதம் மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து கோரியிருந்த போதிலும் 2020 ஜூலை 01 திகதி அளவிலும் ஒரு தடுப்பூசி அலகேனும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. Epoetin Injection 1000IU தடுப்பூசி 2017 ஆண்டின் போது மருந்து மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சிறு பகுதிகளாக கட்டளையிடப்பட்ட போதிலும் அத்தியவசியமாக காணப்படாமையால் மருத்துவ | - மேற்படி - | இந்த பெறுகை தொடர்பாக முறையான சுதந்திரமான விசாரணை நடாத்தப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வழங்கல் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ளவில்லை எனவும், அந்த வைத்தியசாலையின் உரிய உத்தியோகத்தர்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| (vii) 2015 இன் 05 இலக்க தேசிய ஔடத ஒழுங்குறுத்தல் அதிகார சபைச் சட்டத்தின் 109 பிரிவின் பிரகாரம் உயிரொன்றினை காத்துக்கொள்வதற்காக பரவும் நோய்கள் அல்லது தொற்றுநோய்கள் பரவுவதை தவிர்ப்பதற்காக போன்ற விஷேட சந்தர்ப்பங்களின் போது அல்லது வேறேதும் தேசிய தேவைப்பாட்டிற்காக அல்லது தேசிய பாதுகாப்பிற்காக மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் அல்லது வரையறுக்கப்பட்ட உற்பத்திகளின் குறிப்பிட்ட எண்ணிக்கைகளில் இறக்குமதி செய்வதற்கு மற்றும் வழங்குவதற்கு அதிகார சபையினால் அங்கீகாரம் வழங்க முடியும். 2018 தேவைப்பாடு தொடர்பாக Epoetin Injection 1,000IU/Vial pre-filled syringe கட்டளைகள் வழங்கப்பட்டிருந்த வழங்குனர் தேசிய ஔடதங்கள் ஒழுங்குறுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருக்காத காரணத்தினால் அந்த மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு மற்றும் வழங்குவதற்கு பதிவுகளில் இருந்து விடுவித்தல் கடிதம் ஒன்று (Waiver of registration-WOR) வழங்கும் படி கூட்டுத்தாபனத்தினால் 2019 ஜூன் 21 திகதி அந்த அதிகார சபைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதற்கான அத்தியவசியமாக, அவசரமான அல்லது தேசிய தேவைப்பாடு எவை என வெளிப்படுத்தப் படவில்லை. | இந்த மருந்து மற்றும் ஏனைய மருந்துகளின் தேவைப்பாடுகளை தீர்மானிப்பது மருத்துவ வழங்கல் பிரிவினால் ஆகும். அதன்படி மருத்துவ வழங்கல் பிரிவினால் கிடைத்திருந்த அறிவுரைகள் மற்றும் கோரிக்கைகளின் படி WOR இற்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்தது என. | - மேற்படி - |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆண்டிற்கான திரட்டிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | திரட்டிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |